**தமிழ்நாடு ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி, சென்னை–600006**

**மாநிலத்திட்ட இயக்குநரின் செயல்முறைகள்**

**முன்னிலை திரு.இரா.சுதன் இ.ஆ.ப.,**

ந.க.எண்: ACE/118/ஆ3/CG-5/ஒபக/2022, நாள்: 14.10.2022

பொருள் : ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி - 20.10.2022 அன்று மாவட்ட ஆட்சியர் தலைமையில் 2021-22ஆம் ஆண்டில் அரசு மேல்நிலைப் பள்ளிகளில் 12ஆம் வகுப்பு முடித்து உயர்கல்வி தொடராத மாணவர்கள் மற்றும் அவர்தம் பெற்றோருக்கான வழிகாட்டல் முகாம்- சார்ந்து.

பார்வை : 1. அரசாணை நிலை எண்:5, பள்ளிக் கல்வித் துறை (ப.க.5(1)) துறை நாள்: 21.02.2022.

2. இவ்வலுவலக செயல்முறைகள் ந.க.எண்: ACE/118/ஆ3/CG-3/ஒபக/2022,நாள்:23.08.2022.

3. இவ்வலுவலக கடித எண்: ACE/118/ஆ3/CG-4/ஒபக/2022, நாள்: 22.09.2022.

*********

பார்வையில் காணும் அரசாணையில் "அரசு பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு உயர்கல்வி மற்றும் வேலை வாய்ப்புகள் குறித்த ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் அளிப்பதற்கு ஏதுவாக ஒவ்வொரு பள்ளியிலும் வழிகாட்டும் ஆலோசனை மையம் உருவாக்கப்படும். இதற்கென தனியே கலைத்திட்டம் மற்றும் பாடத்திட்டம் உருவாக்கப்பட்டு, 9 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு முறையாக கொண்டு சேர்ப்பதற்கு ஏதுவாக தொடர் வகுப்புகள் நடத்தப்படும். முன்னாள் மாணவர்களைக் கொண்டு அரசுப் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு தொடர் நெறிப்படுத்தும் (Continuous Mentoring) முறையும் அறிமுகப்படுத்தப்படும் எனக் கூறப்பட்டுள்ளது.

<u>பெற்றோர் –மாணவர்களுக்கான முகாம்:</u>

இதன் தொடர்ச்சியாக, **2021-22**ஆம் **கல்வி** ஆண்டில் **12**ஆம் வகுப்பு முடித்த மாணவர்கள், அனைவரும் இவ்வாண்டு 2022-23ல் உயர்கல்வி தொடர்ந்துள்ளனரா என்பதனை அறிந்திடவும், அவ்வாறு உயர்கல்வி தொடரா

மாணவர்கள் இருப்பின் அதற்கான காரணத்தை கண்டறிந்து, அதனை களைந்து, அவர்கள் உயர்கல்வி தொடர்ந்திட தேவையான வழிகாட்டுதல்கள் வழங்கவும், 26.08.2022 அன்று அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளில் பெற்றோர்-மாணவர்கள் கூட்டம் நடைபெற்றது. அவ்விவரங்கள் அன்று நடைபெற்ற SMC கூட்டத்தில் முன் வைக்கப்பட்டது.

**<u>கூட்ட விளைவுகள் (outcome)</u>**

- பெற்றோர்-மாணவர்கள் கூட்டத்தில் 79,762 மாணவர்கள் கலந்து கொண்டு உயர்கல்வி ஆலோசனை பெற்ற மாணவர்களில் **8249 பேர்** இவ்வாண்டு உயர்கல்வி தொடராதது கண்டறியப்பட்டது.
- எனவே, பார்வை-3ல் காணும் கடிதம் வாயிலாக, அத்தகு மாணவர்களின் கூடுதல் விவரங்கள் சார்ந்த மாவட்டங்களில் இருந்து பெற்று, ஒவ்வொரு மாணவரையும் தொடர்பு கொண்டு தற்போதைய நிலையும் கண்டறியப்பட்டுள்ளது. இதில், 1531 மாணவர்கள் தற்போது உயர்கல்வி சேர்ந்துள்ளது கண்டறியப்பட்டுள்ளது.
- இதன்படி, 6718 மாணவர்கள் கீழ்காணும் காரணங்களால் உயர்கல்வி தொடர இயலாத நிலை உள்ளது கண்டறியப்பட்டுள்ளது.
  - வறுமை
  - குடும்ப சூழல்
  - நிதி பற்றாக்குறை
  - தேர்வில் தோல்வி அடைந்தமை
  - உயர் படிப்பில் ஆர்வமின்மை
  - பணியில் சேர்ந்தமை
  - பெற்றோர் அனுமதியின்மை
  - தேர்வு எழுதாமை
  - உடல் நலமின்மை
  - தொழில் புரிதல்
  - கல்லூரியில் விரும்பிய பாடத்தில் சேர்க்கை கிடைக்காமை
  - அருகாமை கல்லூரி இல்லாமை
  - மறுதேர்வு எழுதி தேர்ச்சி பெற்றும் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை நிறைவடைந்தமை ஆகும்.

➢ மேலும் 4007 மாணவர்களை தொலைபேசி இணைப்பு பெறப்படாமையாலும் (not reachable) மற்றும் சில காரணங்களாலும் தொடர்பு கொள்ள இயலவில்லை.

**உயர்கல்வி தொடர்வதற்கான உத்திகள் (Strategy):**

அடுத்த கட்டமாக, இத்தகு மாணவர்களில் 2711 பேருக்கு மாவட்ட ஆட்சியர் தலைமையின் கீழுள்ள **பிற துறையினருடனும் இணைந்து** உயர்கல்வி தொடர்ந்து பயில கீழ்காணுமாறு நடவடிக்கை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. இம்மாணவர்களின் விவரங்கள் மாவட்ட வாரியாக இணைப்பில் வழங்கப்பட்டுள்ளது.

➢ இதன்படி, 20.10.2022 அன்று காலை 10.00 மணிக்கு, மாவட்ட ஆட்சியர் தலைமையில், மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் முகாம் நடத்தப்பட வேண்டும். இம்முகாமில் கலந்து கொள்ள வேண்டிய துறைகளின் பங்கேற்பினை மாவட்ட ஆட்சியர் உறுதி செய்தல் வேண்டும்.

➢ இம்முகாமில் இணைப்பில் கண்டுள்ள மாணவர்கள் சார்ந்த பள்ளிகளின் தலைமையாசிரியர் வாயிலாக 2 நாட்களுக்கு முன்னதாகவே தகவல் தெரிவிக்கப்பட்டு அவர்தம் பெற்றோர்களுடன் தவறாமல் கலந்து கொள்ள முதன்மைக் கல்வி அலுவலர்கள் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும்.

➢ இம்முகாமில் கலந்து கொள்ள வேண்டிய துறைகள் மற்றும் அத்துறையினர் வாயிலாக மாணவர்கள் உயர்கல்வி தொடர மேற்கொள்ள வேண்டிய உத்திகள் பின்வருமாறு வழங்கப்படுகிறது.

| வ. எண் | துறை | மேற்கொள்ள வேண்டிய உத்திகள் | பொறுப்பாளர் |
| --- | --- | --- | --- |
| 1. | **மாவட்ட ஆட்சியர் அலுவலகம்** | ➢ நிதி பற்றாக்குறை, குடும்ப சூழல் மற்றும் பிற நிதி சார்ந்த காரணங்களால் உயர்கல்வி தொடரா மாணவர்களுக்கு அரசு கல்வி உதவித் தொகை / வங்கி ஸ்பான்சர் / வங்கி கடன்/ CSR நிதி/MSMEs, | மாவட்ட ஆட்சியர் |

| | | | |
|---|---|---|---|
| | | கல்வி அறக்கட்டளைகள் வாயிலாக நிதி பெற்று உயர்கல்வி படிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல். | |
| 2. | தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் (TNSDC) | ➢ பொது தேர்வில் தேர்ச்சி பெறாத மற்றும் தேர்வு எழுதாத மாணவர்களுக்கு தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் வழங்கும் வேலை வாய்ப்புடன் இணைக்கப்பட்ட திறன் பயிற்சி சார்ந்து தக்க ஆலோசனை வழங்கி, விருப்பமுள்ள மாணவர்களை விண்ணப்பித்து பயன்பெற செய்தல்.<br>➢ மேற்காண் மாணவர்களில் பிற தகுதியுள்ள மாணவர்களை கண்டறிந்து குறுகிய கால திறன் பயிற்சி / சான்றிதழ் திறன் பயிற்சி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுதல். | ➢ MGMF-TNSDC<br>➢ AD- Skills - TNSDC |
| 3. | தேசிய சுகாதார பணிகள் (NHM) | ➢ பெற்றோர் மற்றும் மாணவர்களுக்கு உயர்கல்வி தொடருதல் சார்ந்து தக்க ஆலோசனை (family counselling/ career counselling) வழங்குதல். | ➢ NHM<br>➢ DIET– KRPs |
| 4. | உயர்கல்வி துறை (Higher Education Department) | ➢ பொதுத் தேர்வு மற்றும் மறுதேர்வில் தேர்ச்சி பெற்றும் கல்லூரி சேர்க்கை தேதி நிறைவடைந்தமையால் உயர்கல்வி தொடரா மாணவர்களுக்கு | ➢ Higher Education Department<br>➢ ITI/Diplamo/ Universities |

| | | | |
|---|---|---|---|
| | | அவ்விடத்திலேயே வாய்ப்புள்ள கல்லூரி/ உயர்கல்வி நிறுவனங்களில் சேர்வதற்கான வழிகாட்டுதல் மற்றும் சேர்க்கை (Spot Admission) வழங்குதல்.<br>➢ மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாணவர்களில் பிற காரணங்களால் உயர்கல்வி தொடரா மாணவர்களுக்கு கல்லூரி/ தொலைதூர கல்வி நிறுவனங்களில் சேர்க்கை வழங்குதல். | |

➢ மேற்காண் துறை தவிர, மாணவர்கள் உயர்கல்வி தொடர பிற துறையின் ஒத்தழைப்பு தேவை ஏற்படின், அவர்களையும் அழைத்து மாணவர்கள் பயன்பெற ஆட்சியர் நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.

**<u>மீதமுள்ள மாணவர்கள் உயர்கல்வி தொடர்வதற்கான உத்தி:</u>**

➢ மேலும், தொடர்பு கொள்ள இயலாத மீதமுள்ள 4007 மாணவர்களை சார்ந்த பள்ளி தலைமையாசிரியர்கள் முகாம் நடைபெறும் 3 நாட்களுக்கு முன்பே, தொலைபேசி வாயிலாகவோ அல்லது நேரிலோ தொடர்பு கொண்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைப்பெறும் முகாமில் தவறாமல் கலந்து கொள்ள செய்தல் வேண்டும்.

**<u>முகாம் நிகழ்வுகள்:</u>**

முகாம் நடைபெறும்போது பின்பற்றப்பட வேண்டிய நிகழ்வுகள் பின்வருமாறு:

| நேரம் | நிகழ்ச்சி நிரல் | பொறுப்பாளர் |
|---|---|---|
| 10.00 AM | தமிழ் தாய் வாழ்த்து | பங்கேற்பாளர்கள் |
| 10.00-10.05AM | வரவேற்புரை | உதவி/கூடுதல் மாவட்ட திட்ட அலுவலர்கள் (APO/ ADPC) |
| 10.05-10.15 AM | பெற்றோர் – மாணவர்களுக்கான | மாவட்ட ஆட்சியர் |

| | | |
|---|---|---|
| | கூட்டம் தொடங்கி வைத்தல் | |
| 10.15-10.30 AM | பெற்றோர் -மாணவர் கூட்டம் – நோக்கம் மற்றும் பயன்கள் எடுத்துரைத்தல் | முதன்மை கருத்தாளர்கள் – DIET |
| 10.30- 5.30 PM | மாணவர்கள் உயர்கல்வி தொடர்வதற்கான பணிகள் | துறைசார்ந்த அலுவலர்கள் |

- முகாம் நடைபெறுதலுக்கான பேனர்கள் வைக்கப்பட வேண்டும்.

**<u>பொறுப்புகளும் கடமைகளும்</u>**

**அ. உதவி/கூடுதல் மாவட்ட திட்ட அலுவலர்கள் (APO/ ADPC)**

- மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் முகாம் நடை பெறுதலுக்கான கீழ்காணும் அனைத்து ஏற்பாடுகளும் முன்கூட்டியே செய்தல் வேண்டும்.
    - முகாம் நடைபெறுவதற்கான மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கு (meeting hall) மற்றும் தேவையான கணினி வசதிகள்.
    - மாவட்ட ஆட்சியரின் அனுமதி பெற்று சார்ந்த துறை அலுவலர்களை முகாமில் கலந்து கொள்ள செய்தல்.
    - அனைத்து துறை சார்ந்த அலுவலர்களும் இணைந்து செயல்பட ஏதுவாக இருக்கை வசதி ஏற்படுத்துதல்.
    - பெற்றோர் மற்றும் மாணவர்கள் அமர தேவையான இருக்கை வசதி மற்றும் குடிநீர் வசதி ஏற்படுத்துதல்.
    - மேற்குறிப்பிட்டவாறு கூட்ட நிகழ்வுகள் நடைபெறுதலை உறுதி செய்தல்.

**ஆ. பள்ளி தலைமையாசிரியர்கள்**

- அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களும் இணைப்பில் கண்டுள்ள தங்கள் பள்ளி சார்ந்த மாணவர்களை, 100% உயர்கல்வி தொடர ஏதுவாக, மேற்காண் முகாமில் கலந்து கொள்ள செய்வது அவர்தம் முழு பொறுப்பாகும்.

## இ. DIET பேராசிரியர்கள்

- உயர்கல்வி வழிகாட்டி பயிற்சி பெற்ற 76 முதன்மை கருத்தாளர்கள் (DIET பேராசிரியர்கள்) முகாம் நடைபெறும் நாளன்று, சார்ந்த மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு சென்று முகாமில் கலந்து கொள்ள வேண்டும்.
- அனைத்து துறையினரோடும் இணைந்து மாணவர்களுக்கு அவர்தம் உயர்கல்வி தொடர தக்க ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் வழங்கி பொருத்தமான உத்திகளை தெரிவு செய்வதிலும் வழிகாட்டுதல் வேண்டும்.
- முகாமில் கலந்து கொள்ளும் மாணவர்கள் விவரங்கள், அவர்கள் உயர்கல்வி தொடர்வதில் உள்ள பிரச்சனைகள், முகாமில் அவர்களுக்கு உயர் கல்வி தொடர்வதற்காக தெரிவு செய்யப்பட்ட பொருத்தமான உத்தி சார்ந்த விவரங்களை மாநில திட்ட இயக்ககத்திலுருந்து வழங்கப்படும் இணைய வழி படிவத்தில் பூர்த்தி செய்தல் வேண்டும்.

## ஈ. ஆசிரியர் பயிற்றுநர்கள்.

- ஒன்றிய ஆசிரியர் பயிற்றுநர்கள் தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள அரசு மேல்நிலை பள்ளிகளில் 3 நாட்களுக்கு முன்னதாகவே சென்று தலைமையாசிரியருடன் இணைந்து இணைப்பில் உள்ள மாணவர்களை நேரிலோ அல்லது தொலைபேசி வாயிலாகவோ தொடர்பு கொள்ள உதவுதல் வேண்டும். அப்போது,
    - முகாம் நடைபெறும் நாள், நேரம் மற்றும் இடம்
    - மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு எவ்வாறு செல்லுதல்
    - முகாமில் கலந்து கொள்ளுதலால் ஏற்படும் பயன்கள் குறித்து விரிவாக எடுத்துரைத்தல் வேண்டும்.
- முகாம் நடைபெறும் நாளன்று இணைப்பில் கண்டுள்ள ஒன்றியத்திற்கு தலா 2 ஆசிரியர் பயிற்றுநர்களை ஒருங்கிணைப்பு பணிகளுக்காக ஈடுபடுத்திடல் வேண்டும்.
- முகாமில் கலந்து கொள்ள வரும் பெற்றோர் மற்றும் மாணவர்களை வரவேற்று இருக்கையில் அமர செய்தல் வேண்டும்.

➢ தங்கள் ஒன்றியம் சார்ந்த மாணவர்களை முகாம் அரங்கில் அடையாளம் கண்டு ஒவ்வொரு மாணவராக அந்தந்த துறையினர் வழங்கும் சேவை அமர்வுக்கு அழைத்து செல்லுதல் வேண்டும்.

**உ. மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள்**

இம்முகாம் சார்ந்த நிகழ்வுகளை மாநிலத் திட்ட இயக்ககத்திலிருந்து வழங்கப்படும் இணையவழி இணைப்பில் பூர்த்தி செய்து மாநில திட்ட இயக்ககத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

எனவே, சார்ந்த மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் முகாமினை சிறப்பான முறையில் நடத்தி, இணைப்பில் கண்டுள்ள அனைத்து மாணவர்களையும், மேற்காண் முறையில் தவறாது கலந்து கொண்டு பயன் பெற செய்தல் வேண்டும். மாணவர்கள் விருப்பம் மற்றும் சூழலுக்கு தக்கவாறு குறிப்பிட்டுள்ள துறைகள் துணையுடன் உரிய உயர்கல்வியினை தெரிவு செய்து உயர்கல்வி தொடர்ந்திட ஆவண செய்தல் வேண்டும்.

இணைப்பு: 1. மாவட்ட வாரியாக மாணவர்களின் பட்டியல்

2. இணைய வழி படிவம்

மாநில திட்ட இயக்குநர்

**பெறுநர்**

1. அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
2. அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

**நகல்**
**(முதன்மைக் கல்வி அலுவலர் வழியாக)**

1. பேராசிரியர்கள், மாவட்ட கல்வி மற்றும் ஆசிரியர் பயிற்சி நிறுவனம், அனைத்து மாவட்டங்கள்
2. சார்ந்த தலைமை ஆசிரியர்கள்(அரசு மேல்நிலைப் பள்ளிகள்)
3. அனைத்து மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள்
4. வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள், அனைத்து ஒன்றியங்கள்
5. அனைத்து ஆசிரியர் பயிற்றுநர்கள், அனைத்து ஒன்றியங்கள்